# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

<u>ஆணை நாள் 02.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 175/B/2020</u>**

திரு, அ. வே. தட்சிணாமூர்த்தி, மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
நான்குநேரி வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம். பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (02.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு, அ. வே. தட்சிணாமூர்த்தி, மற்றும் பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், நான்குநேரி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 08.08.2019 தேதியிட்ட மனுவில், திருநெல்வேலி மாவட்டம் நான்குநேரி வட்டம் இலங்குளம் கிராம புல எண்கள் தொடர்பாக பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திசையன் விளை வட்டம், திருநெல்வேலி மாவட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. அம்மனுவினை பெற்றுக்கொண்டு பொதுத் தகவல் அலுவலர் தகவல்கள் வழங்காததால் மனுதாரர், 30.10.2019 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை முதல் மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். அம்மனுவினை பெற்றுக்கொண்டு முதல் மேல்முறையீட்டு அலுவலரும் தகவல்கள் வழங்காததால் மனுதாரர் 02.01.2020 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

**4. இன்று தொலைபேசியின் வாயிலாக மேற்கொண்ட விசாரணையில், மனுதாரர் இதுவரை சாரியான தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் வழங்கவில்லை என்று**

**வாதிட்டார். ஆவணங்களை பரிசீலனை செய்ததில் பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் தகவல்கள் வழங்கவில்லை என்று இவ்வாணையம் முடிவு செய்கிறது, ஆகையால்** தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 08.08.2019 தேதியிட்ட மனுவில், கோரிய தகவல்களை **மனுதாரர் அலுவலக நாட்களில் நேரடியாக சென்று ஆவணங்களை பார்வையிட இவ்வாணையம் அனுமதி வழங்குகிறது. அவ்வாறு நேரடியாக சென்று ஆவணங்களை பார்வையிட்டு குறிப்பிட்டு கோருகிற தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் வழங்கவேண்டும் என்று இவ்வாணையம் உத்தரவிட்டு இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 175/B/2020**
**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
நான்குநேரி வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

திரு. அ.வே. தட்சிணாமூர்த்தி,
த/பெ. திரு. இரா. அ. வேணுகோபால்,
எ. 222. அரசு அலுவலர் எ குடியிருப்பு,
திருநெல்வேலி - 627 007

Copy to: File
Mj SrPc 10.11.20